அரசாங்க நிருவாகச்சுற்றறிக்கை இல. 14/91 (vi).

அரசாங்க நிருவாக மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1993. 15 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
அரசாங்க அதிபர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
மற்றும் அரசாங்க கூட்டுத்தாபன, நியதிச் சட்டசபைகள்
– என்பவற்றின் தலைவர்களுக்கும்.

<u>சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்தல்.</u>

1991, மே மாதம் 08 ஆந் திகதி 14/91ஆம் இலக்கமும், 1991.10.04ஆந் திகதி 14/91 (1) ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையால் உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

02. 1991.10.04ஆந் திகதி வெளியிடப்பட்ட 14/91(1)ஆம் இலக்கமுள்ள சுற்றறிக்கையின் 2- (2) பந்தியை அடுத்துக் கீழ்வரும் பந்தி சேர்க்கப்பட்டுச் சுற்றறிக்கை திருத்தப்படுகின்றது:-

" (2) (அ) எவ்வாறு இருப்பினும் எவரேனுமோர் உத்தியோகத்தர் அரசாங்க வழங்கல் திணைக்களத்திலிருந்து வாகனமொன்றைக் கொள்வனவு செய்து மூன்று வருடங்கள் கடந்த பின்பு அந்த வாகனம் பாவனைக்குத் தகுதியுடையதன்று என்றும் தகுதியற்றதெனக் கழித்தொதுக்கப்பட்டதென்றும் அவரின் பெயருக்குச் செய்யப்பட்ட பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்று உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றை மோட்டார் வாகன ஆணையாளரிடமிருந்து பெற்று உரிய அதிகாரிக்குச் சமர்ப்பிக்க முடியுமாயின் அத்தகைய உத்தியோகத்தருக்கு சலுகை அடிப்படையில் வாகனமொன்றை இறக்குமதி செய்ய இடமளிக்க இயலும்."

03. இச் சுற்றறிக்கை திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம். எம். என். ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.